**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 100/2013 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Karthick | CASTE | : | |
| S/O. / W/O. | Pandian | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**CHIEF EXAMINATION: 24-11-2020**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி. எனது தரப்பு முதல் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் தெரியும். 30.06.1993ம் தேதியிட்ட உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும் 14.3.2013ம் தேதியிட்டு என் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 2 ஆகும். 23.5.2019ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட்ட பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். எனது வீட்டிற்கு செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீது பி.வா.சா.ஆ.4 ஆகும். எனது வீட்டில் உள்ள குடிநீர் இணைப்பிற்கு செலுத்தப்பட்ட குடிநீர் வரி ரசீது பி.வா.சா.ஆ.5 எனது வீட்டிற்கு செலுத்தப்பட்ட மின்கட்டண வரி ரசீது பி.வா.சா.ஆ.6 ஆகும். (பி.வா.சா.ஆ1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் இடைக்கால மனு 379/2020ன் உத்தரவின்படி இரண்டாம் நிலை சாட்சியமாக குறியீடு செய்ய அனுமதிக்கப்பட்டது.) மேற்படி ஆவணங்களையும் வாக்கு மூலத்தையும் ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி